*கவனிக்க.- 2024.06.14 ஆந் திகதிய 2389 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2390 - 2024 ජූනි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.06.20

*2390 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1462 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1469 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, யூலை மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூன் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1459-B 82582-5,441 (2024/06)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;

III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;

IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;

VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;

VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;

VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.

2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.

3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.

5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;

7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.

8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.

9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.

10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.

11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.

13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.

14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.

16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.

17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:

(i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;

(ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;

(iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.

(iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;

(v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;

(vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;

(vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;

(viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;

(ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;

(x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;

(xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;

(xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;

(xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தர கடற்படையின் கைவினைஞர் பிரிவில் கடலோடிகளுக்கான வெற்றிடங்கள்

கடலோடிகளை ஆட்சேர்ப்பதற்கான இலங்கை நிரந்தர கடற்படையின் கைவினைஞர் (ஆண்/ பெண்) பிரிவில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. பின்வரும் தகைமைகளையுடைய ஆண் மற்றும் பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர கடற்படைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர கடற்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| (அ) | தேசிய இனம் | - ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். |
| (ஆ) | வயது | - 2024, யூலை மாதம் 18 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 24 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |
| (இ) | உயரம் | - (ஆண்) 5 அடி 5 அங்குலம், (பெண்) 5 அடி 3 அங்குலத்தை விட குறையாதிருத்தல் வேண்டும். |
| (ஈ) | நிறை | - (ஆண்) 47 கிலோகிராம் (105 பவுன்ஸ்)<br>- (பெண்) 36 கிலோகிராமிற்குக் (80 பவுன்ஸ்) குறையாதிருத்தல் வேண்டும். |
| (உ) | மார்பு | - 32 அங்குலத்தை விடக் குறையாதிருத்தல் வேண்டும் |
| (ஊ) | பார்வை வர்ணப்பதிவு மட்டம் | - STD II |
| (எ) | தொலை பார்வை | - இடக்கண் 6/6 மற்றும் வலக்கண் 6/6 (மூக்குக் கண்ணாடிகள் மற்றும் கண்ணாடி வில்லைகள் பயன்படுத்தாமல்) |
| (ஏ) | குடியியல்நிலை | - விண்ணப்பதாரிகள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். எந்தவொரு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவரும் பயிற்சி காலத்தின் போது திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். |

**3. வெற்றிடங்கள் (பிரிவுகள்)**

(அ) தகைமையுடைய நபர்கள் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா மூன்று வருட முழு- நேர பயிற்சிநெறிக்காக பின்வரும் பிரிவுகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். (ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை கடற்படைதொழில்நுட்ப நிறுவகம் ஆகியவற்றால் வழங்கப்படும்)

(1) தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (கடற்படை பொறியியல்)
(2) தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (வாகனப் பொறியியல்)
(3) தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (மின் பொறியியல்)
(4) தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (மின் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல்)
(5) தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (கப்பலின் அடிப்பாகப் பொறியியல் மற்றும் கப்பற் கட்டுமானம்)

**4. கல்வித் தகைமைகள்**

அ. க.பொ.த. (சா.த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத முயற்சிகளில் கணிதத்தில் திறமை சித்தியுடன் ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் தாய்மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பின்வரும் பிரிவுகளில் பரீட்சைக்குத் தோற்றுதல்
(1) பௌதிகவியல் பிரிவு
(2) உயிரியல் பிரிவு
(3) தொழில்நுட்பப் பிரிவு (தொழில்நுட்பத்திற்கான அறிவியல் மற்றும் பொறியியல் தொழில்நுட்பம்) சேர்க்கப்பட வேண்டும்.

5. பந்தி 2 மற்றும் 4 இலுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், பார்வை மற்றும் நிறை என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட உயரம், பார்வை மற்றும் நிறை ஆகிய தகைமைகளைக் கொண்டிராத

விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். சேவையில் சிறப்புத் திறமை மதிப்பொன்றைக் கொண்டிருக்கக்கூடிய எந்தவொரு விண்ணப்பதாரியும் இலங்கை கடற்படை தளபதியின் விருப்புரிமையினால் அவர் தேவையான உயரத்தைக் கொண்டிராவிடினும் கருத்திற்கொள்ளப்படுவார்.

6. **சேவை நிபந்தனைகள்**

அ. விண்ணப்பதாரிகள் ஆரம்பத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களாக சேர்த்துக்கொள்ளப்படுவதுடன் அவர்கள் அடிப்படை பயிற்சிப் பாடநெறிகளுக்கு உட்படுத்தப்பட தேவைப்படுத்தப்படுகின்றனர்.

ஆ. பயிற்சி காலப்பகுதியின் போதும் மற்றும் பின்னரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் கடற்படை சட்டத்திற்கு உட்பட்டவர்களாவர்.

இ. ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அனைவருக்கும் சீருடைகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.

ஈ. பயிற்சிக் காலப்பகுதியின் போது, இலங்கை கடற்படையினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களுக்கு வதிவிட வசதிகள் மற்றும் உணவு என்பன வழங்கப்படும்.

உ. பயிற்சிக் காலப்பகுதியின் போது, ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர் ஒருவர் அவரின் விண்ணபத்தை நீக்குவதற்கு விரும்புவாராயின், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர் அவரின் பயிற்சிக்காக இலங்கை அரசாங்கத்தினால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களையும் இலங்கை அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டும்.

ஊ. பயிற்சிக் காலப்பகுதியின் போது, ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவரின் தவறான நடத்தையின் காரணமாக அல்லது அவர் /அவள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர் பொறுப்பாகவுள்ள ஏனைய ஏதேனும் காரணத்திற்காக, அவர் / அவள் கடற்படைச் சேவைக்கு தகுதியற்றவர் என பொறுப்புடைய அதிகாரிகள் தீர்மானிப்பார்கள் எனின், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர், அந்த சந்தர்ப்பத்திலேயே, அவர் /அவள் தனக்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களையும் இலங்கை கடற்படைக்கு திருப்பிச் செலுத்துவதற்கு ஒப்புக்கொண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதிநிதியான கடற்படை தளபதியுடன் ஒரு பிணை ஒப்பந்தத்தில் ஈடுபடல் வேண்டும்.

எ. கடமைகளுக்காகவோ அல்லது பயிற்சிக்காகவோ, அனைத்து கடலோடிகளும் இலங்கையின் ஏதேனும் ஒரு பகுதிக்கு அல்லது ஒரு வெளிநாட்டுக்கு இணைக்கப்பட்டிருப்பதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்** - தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்தின் கீழ்வரும் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்கனவேயுள்ள மற்றும் சட்டமாக்கக்கூடிய அனைத்து கட்டளைகள் மற்றும் சட்டவாக்கத்திற்கும் கீழ்படிய வேண்டும்.

8. **சம்பளங்களும் கொடுப்பனவுகளும்**.- 03/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கிணங்க 2020.01.01 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். அதற்கிணங்க,

| | | |
|---|---|---|
| அ. | அடிப்படைச் சம்பளம் | - ரூ.30,140.00 |
| ஆ. | வாழ்க்கைச் செலவுப் படி | - ரூ. 17,800.00 |
| இ. | சீருடை சுத்தம் செய்தல் படி | - ரூ. 350.00 |
| ஈ. | கடினப்படி (கஷ்டப் பிரதேசங்களுக்காக) | - அடிப்படை பயிற்சிக்குப் பிறகு உரித்துடையது. |
| உ. | கடினப்படி (கஷ்டமல்லாப் பிரதேசங்களுக்காக) | - அடிப்படை பயிற்சிக்குப் பிறகு உரித்துடையது. |
| ஊ. | வேறு படிகள் - சிறப்புப் படி | - ரூ. 1,000.00 |
| | - சிறப்பு மேலதிகப் படி | - ரூ. 2,400.00 |
| எ. | இடைக்கால கொடுப்பனவு | - ரூ. 5,000.00 |
| | மொத்தச் சம்பளம் தோராயமாக (உணவு கொடுப்பனவு உட்பட) | - ரூ. 88,115.00 |

ஏ. ஆண்டொன்றிற்கு மூன்று சோடி புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்கப்படும். (கடலோடி, மனைவி, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப்போருக்கு ஏற்புடையதாகும்.)

ஐ. முகாமில் வசிக்கும் கடலோடிகளுக்கு மாதமொரு தடவை படைவீரர்கள் தங்குமிடத்திலிருந்து அவர்களின் வீட்டிற்கு போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டு அல்லது பேரூந்து கட்டணச் செலவு மீளளிப்பு.

ஒ. இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படும் (கடலோடி, மனைவி, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப்போருக்கு ஏற்புடையதாகும்.)

ஓ. அரசாங்க குடிமனைகளில் வசிக்காத திருமணமான கடலோடிகள் ரூ. 2,400.00 முதல் ரூ. 6,600.00 வரையான வீட்டு வாடகைக் கொடுப்பனவிற்கு உரித்துடையவர்களாவர்.

ஔ. திருமணமான கடலோடிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள குடிமனைகளிலுள்ள வெற்றிடங்களுக்கு ஏற்ப திருமணமான கடலோடிகளுக்கு குடிமனைகள் வழங்கப்படும். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கிணங்க கட்டணம் அறவிடப்படும்.

க. அடிப்படைப் பயிற்சிக்குப் பிறகு, வெளியே வசிக்கும் திருமணமான கடலோடிகளுக்கு ரூ. 30,000.00 உணவு கொடுப்பனவாக வழங்கப்படுகிறது.

9. **சலுகைகள்:** கடற்படையின் தொழில்நுட்ப பிரிவில் உள்ள கடற்படை வீரர்களுக்கு சிறப்பு பதவி உயர்வு நடைமுறை பின்பற்றப்படுகிறது, இதன் மூலம் தொழில்நுட்ப கடற்படையினர் காலியிடங்கள் அல்லாத பதவி உயர்வுகளுக்கு தகுதியுடையவர்கள் ஆவார்.

10. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**

அ. விண்ணப்பதாரி மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க தெளிவான கையெழுத்தால் தன்னால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2024, யூலை மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பு), கடற்படைத் தலைமையகம், த. பெ. இல. 593, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.பதிவுத் தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கைவினைஞர் கடலோடிகளின் ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் தகைமையற்ற விண்ணப்பங்கள் என்பன கவனிக்கப்படமாட்டா. மேலதிக விபரங்களுக்கு, 011-7195162, 011-7195155 ஆகிய இலக்கங்களைத் தொடர்பு கொள்ளவும் அல்லது www.navy.lk எனும் வலைத்தளத்திற்குள் பிரவேசிக்கவும்.

ஆ. அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனங்களில்/சபைகளில்/குடியியல் தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/கூட்டுத்தாபனங்களின்/சபைகளின்/குடியியல் தாபனங்களின் தலைமை அதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும் மற்றும் விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் விடுவிக்கப்படுவார் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பரீட்சார்த்திகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் போது அல்லது அவ்வாறு செய்ய வேண்டும் எனக் கூறப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்:

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளைக் கொண்ட சான்றிதழ்கள் ;
3. பாடசாலை விடுகைச் சான்றிதழ் ;
4. கிராம அலுவலரின் சான்றிதழ் (விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து 6 மாத காலத்திற்குள் பெறப்பட்டது) ;
5. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட தொழில்சார்/தொழில்நுட்பப் பயிற்சி மற்றும்/அல்லது அனுபவச் சான்றிதழ்கள்(ஏதேனும் இருப்பின்)
6. அண்மையில் பெறப்பட்ட மூன்று நன்நடத்தைச் சான்றிதழ்கள். இதில் ஒன்று, விண்ணப்பதாரி இறுதியாகக் கல்விகற்ற பாடசாலையின் அதிபரிடமிருந்தும் மற்றையது விண்ணப்பதாரியை இரண்டு வருடங்களுக்கு மேலாக அறிந்திருக்கின்ற பொறுப்பான நபரொருவரிடமிருந்து அல்லது தற்போதைய தொழில்வழங்குநரிடமிருந்து பெறப்பட்டிருத்தல் வேண்டும். (தொழில் செய்பவராக இருப்பின்)
7. விளையாட்டு மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான சான்றிதழ்கள்–

(ஈ) ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டப்படும் போது சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பப்படிவங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(உ) விண்ணப்பப்படிவத்துடன் ஆவணங்கள் அல்லது ஆவணங்களின் மூலப் பிரதிகள் இணைக்கப்படலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படும் சான்றிதழ்களின் ஏதேனும் மூலப் பிரதிகள் காணாமற் போனால் இலங்கை கடற்படை அதற்குப் பொறுப்பாகாது.

11. தேர்வுக்கு முன்னர் அவருடைய/ அவளுடைய விண்ணப்பப்படிவத்தில் உள்ள ஏதேனும் ஒரு கூற்று தவறானது எனக் கண்டறியப்பட்டால் விண்ணப்பதாரி தகைமை இன்மைக்கும் தேர்வுக்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அவர் / அவள் பதவி நீக்கத்திற்கும் உரித்துடையவராவார்.

**12. நேர்முகப் பரீட்சைத் தேர்வுகள் முதலியவை :**

(அ) மேற்குறித்த நிபந்தனைகளைப் பூர்த்திசெய்கின்ற விண்ணப்பதாரிகள் இலங்கை கடற் படையினால் பரிந்துரை செய்யப்பட்ட ஆரம்ப நிலை மருத்துவ பரிசோதனையில் தேர்ச்சி பெற வேண்டும். அதன் பிறகு தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரிகள் தேர்வுக் குழு ஒன்றின் முன்னிலையில் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு தோற்ற வேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரிகள் பூரண மருத்துவப் பரிசோதனைக்குப் பிறகு பின்வரும் உடல் தகைமை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

(ஆ) உடற் தகைமைப் பரிசோதனையில் தேர்ச்சி பெறுவதற்கான தேவைப்பாடுகள் :

| உடற்பயிற்சி | நேரம் (நிமிடங்கள்/ செக்கன்கள்) | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1600 மீ. ஓட்டம் | | 09 நிமிடங்கள் | 11 நிமிடங்கள் |
| தள்ளுதல் (Push up) | 01 நிமிடம் | 12 அல்லது அதற்கு மேல் | 08 அல்லது அதற்கு மேல் |
| இருத்தல் (Sit up) | 01 நிமிடம் | 10 அல்லது அதற்கு மேல் | 07 அல்லது அதற்கு மேல் |
| | | | - |

(இ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் பூர்ணா மருத்துவப் பரிசோதனைக்காக கடற்படை மருத்துவ சபையின் முன் தோற்றவேண்டும். தகுதி பெறும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் இலங்கை கடற்படையின் தொழில்நுட்பப் பிரிவில் பயிலுநர் கடற்படை வீரராக சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(ஈ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையின் திகதி, நேரம் மற்றும் இடம் பற்றி வட்ஸ்அப் மூலம் அறிவிக்கப்படுவார்கள். எழுத்து மூலம் அறிவிக்கப்படமாட்டார்கள். இது தொடர்பான போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

(உ) விண்ணப்பதாரி ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அவருடைய/ அவளுடைய ஆளடையாள அட்டையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பதாரி ஒருவரைப் பரிந்துரை செய்ய விரும்பும் எவரேனும் ஒருவர் அவருடைய / அவளுடைய சான்றாதாரத்தினைப் பயன்படுத்தி அவ்வாறு பரிந்துரை செய்தல் வேண்டும். ஏதேனும் வகையிலான ஆதரவளித்தல் அல்லது விண்ணப்பதாரி ஒருவரின் தெரிவில் செல்வாக்குச் செலுத்தல் என்பன அத்தகைய விண்ணப்பதாரியின் தகைமையின்மைக்கு வழிவகுக்கும்.

(எ) ஆட்சேர்ப்புக்குத் தெரிவு செய்யப்படாத விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படமாட்டார்கள்.

(ஏ) விண்ணப்பதாரர்கள்/விண்ணப்பதாரிகள் சமர்ப்பித்த கல்விச் சான்றிதழ்கள் மற்றும் தொழில்முறைத் தகுதிகள் அவற்றின் நம்பகத்தன்மையை உறுதிசெய்வதற்காக பரீட்சை திணைக்களம் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு அவற்றின் நம்பகத்தன்மை உறுதி செய்யப்படும்.

(ஐ) அனைத்து விண்ணப்பதாரர்களின் பாதுகாப்பு அனுமதி அறிக்கைகள் இலங்கை கடற்படைத் தலைமையகத்தால் மீள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்படும்.

(ஒ) இலங்கை கடற்படைக் கட்டளைத்தளபதி, இலங்கை கடற்படையில் பயிலிளவல் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்கின்ற செயன்முறையின் இறுதித் தீர்மானங்களை மேற்கொள்கின்ற தத்துவத்தைக் கொண்டிருப்பதுடன் தேசிய பாதுகாப்பு, இராணுவ மற்றும் இலங்கை கடற்படையின் நிர்வாகம்சார் தேவைப்பாடுகள் ஆகியவற்றுக்கேற்ப இலங்கை கடற்படைக் கட்டளைத் தளபதி மேற்படி தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான இறுதித் தீர்மானம் மேற்கொள்கின்ற தற்றுணிவினைக் கொண்டிருப்பார்.

**குறிப்பு**.- இவ் வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிகளுக்கிடையில் தெளிவின்மை காணப்படும் போது சிங்கள மொழி மூலமான வாசகங்கள் மேலோங்கிக் காணப்படும்.

யூ. வீ. எம். பி பெரேரா, பிஎஸ்சீ,என்டீயூ, யூஎஸ்பி, **ஆர்எஸ்பி,
வைஸ் அத்மிரால்,
இலங்கை கடற்படைத் தளபதி.

இலங்கை கடற்படைத் தலைமையகம்,
த. பெ. இல. 593,
கொழும்பு 01.

**இலங்கை நிரந்தரக் கடற்படையில் கைவினைஞர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம்**

1. தேசிய இனம்: ..............................................................................................................................
(இலங்கைப் பிரசையாவது பரம்பரை மூலமா அல்லது பதிவின் மூலமா என்பதைக் குறிப்பிடுக மற்றும் பதிவு மூலமான பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும், திகதியையும் குறிப்பிடவும்)
2. விண்ணப்பிக்கும் பிரிவு (முன்னுரிமை அடிப்படையில்) : ..............................................................
3. முழுப் பெயர் (தேசிய ஆளடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) :.............................................
4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ...........................................................................................
5. நிரந்தர முகவரி : .........................................................................................................................
6. தபால் முகவரி : ..........................................................................................................................
7. பிறந்த திகதி : ............................................................................................................................
8. வயது : வருடங்கள் :................ மாதங்கள் :..................... நாட்கள் : .................. (2024, யூலை மாதம் 18 ஆந் திகதிக்குள்)
9. உயரம் :............... (அடி மற்றும் அங்குலங்கள்)
மார்பு :................ (அங்குலங்கள்) நிறை :................... (கி.கி.)
10. நிரந்தர முகவரிக்கு அண்மையில் உள்ள பொலிஸ் நிலையம் : ...........................................................
11. மாவட்டம் : ..............................................................................................................................
12. தேர்தல் தொகுதி : ......................................................................................................................
13. கிராம அலுவலர் பிரிவு :..............................................................................................................
14. தொலைபேசி இலக்கம் : ...............................................................................................................
15. வட்ஸ்அப் (Whatsapp) இலக்கம் : ..................................................................................................
16. குடியியல் நிலை : .........................................................................................................
17. பால் : .............................................................................................................................
18. கல்வி கற்ற பாடசாலைகள் (ஒழுங்கு அடிப்படையில்) : ........................................................................
19. கல்வி கற்ற பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலை/ பல்கலைக்கழகத்தின் பெயர் | தோற்றியுள்ள பரீட்சை | பரீட்சைக்கு தோற்றிய வருடம் | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>வேறு | | |

| பாடசாலையின் பெயர் | க. பொ. த. (உ.த.) பரீட்சையில் தோற்றிய பாடம் | பரீட்சைக்கு தோற்றிய வருடம் |
|---|---|---|
| | கணிதப்பிரிவு<br>உயிரியல் பிரிவு<br>தொழில்நுட்பப்பிரிவு | |

20. பாடசாலை/பல்கலைக்கழகத்திலிருந்து விலகிய பின்னர் செய்த தொழில் பற்றிய விபரங்கள் : (ஏற்புடையதாயின்)

| தொழில் வழங்குநரின் பெயர் மற்றும் முகவரி | தொழிலின் தன்மை | சேவைக் காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

21. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

| முழுப் பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

22. இப் பதவி தொடர்பான ஏதேனும் விசேட தகைமை : ..................................................................................................................

23. விளையாட்டுக்களில் தற்போதைய சாதனைகள் பற்றிய விபரங்கள் (பங்குபற்றிய குழுக்கள் மற்றும் போட்டிகள் பற்றிய விபரங்கள் திகதிகள்/வருடங்கள் ஏனையவற்றுடன் பெற்றுக் கொண்ட தரநிலைகள்/மட்டங்களுடன் குறிப்பிடுக.) :
..................................................................................................................................................................................

24. பாடசாலையில்/பல்கலைக்கழகத்தில் அல்லது வெளி நிறுவனங்களில் பெற்றுக்கொண்ட ஏனைய சாதனைகள் (திகதிகள் / வருடங்கள் ஏனையவற்றுடன் விபரங்களைக் குறிப்பிடவும்) : .......................................................................................

25. ஆயுதந் தாங்கிய படை அல்லது தொண்டர் படை, பயிலிளவல் படையணி அல்லது இளைஞர் சாரணர் அமைப்பு ஆகியவற்றில் முன்னைய ஏதேனும் சேவைகள் : ..............................................................................................................................

26. இலங்கை கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதந் தாங்கிய படை அல்லது பொலிஸ் ஆகியவற்றில் இணைந்து கொள்வதற்காக ஏற்கனவே விண்ணப்பித்துள்ளீர்களா? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களையும் அத்தகைய விண்ணப்பங்களின் பெறுபேற்றினையும் குறிப்பிடுக: ..............................................................................................................................

27. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றில் தண்டிக்கப்பட்டு அல்லது பிணிக்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுக : ......................................................................................................................

28. அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது அரச துறை/சபை/கூட்டுத்தாபனம் (அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்ற மத்திய வங்கி, தேசிய வங்கிகள், பல்கலைக்கழகங்கள், கூட்டு இருப்புக் கம்பனிகள் உள்ளடங்கலாக) ஆகியவற்றில் ஏலவே சேவையில் ஈடுபட்டிருப்பின் அத்தொழிலை முடிவுறுத்தியமைக்கான காரணங்கள்) : ...............................................................
........................................

29. நன்னடத்தைச் சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| பெயர் | பதவி | தபால் முகவரி |
|---|---|---|
| | | |

30. விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப்பட வேண்டிய உறுதிமொழி:

மேற்குறித்த வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட பதில்கள் என் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கைவினைஞர்கள் (Artificers) பிரிவுக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக பிரயோகிக்கப்படும் விதிகளையும், பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளையும் வாசித்துப் புரிந்து கொண்டேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ....................................                                    ............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

06-171

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திருத்தம்

### தேசிய பொறியியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான ஆட்சேர்ப்பு செய்தல் - 2024 தொகுதி

*2376 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட "தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா" பாடநெறிக்கான 2024 ஆம் ஆண்டிற்கான தொழிற்பயிற்சியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதை மேலும் நீடிக்க கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் கற்கைகள் சபை தீர்மானித்துள்ளது. 15.03.2024 புதிய விண்ணப்ப காலம் 20.06.2024 முதல் 08.07.2024 வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

*இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் 20.06.2024 அன்று ஆன்லைன் விண்ணப்பச் செயல்முறையைத் திறந்து 08.07.2024 அன்று மதியம் 12.00 மணிக்கு முடிவுறுத்தும். பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம், ஆன்லைன் விண்ணப்பச் செயல்முறையிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் இறுதி சமர்ப்பிப்புகளை, பதிவுத் தபால் மூலம் 22.07.2024 வரை ஏற்றுக்கொள்ளும். 2024 ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தர முடிவுகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கலாம்.*

*06-158*

---

### தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் - அத்துருகிரிய

*2024/2025 கல்வியாண்டுக்கான மாணவர்களை சேர்த்துக்கொள்ளுதல்*

*தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமானது விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. மற்றும் இலங்கையில் பெருந்தோட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் ஈடுபட ஆர்வமுள்ளவர்களினது கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உயர்த்தும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட ஒரேயொரு அரச நிறுவனமாகும்.*

*2024/2025 கல்வியாண்டுக்கான கீழ்க்கண்ட படிப்புகளுக்கு உயர் தரத்தில் சித்தி பெற்ற மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.*

*01.* **INDUCTION PROGRAMME IN PLANTATION MANAGEMENT & TECHNOLOGY (IPPMT) - PLANTER TRAINEE PROGRAMME**
***(உதவி தோட்ட கண்காணிப்பாளர் பயிற்சி வகுப்பு)***

| | | |
|---|---|---|
| காலம் | - | ஒரு வருடம் (01) |
| முதலாம் கட்டம் | - | 06 மாத முழு நேரப் படிப்பு |
| இரண்டாம் கட்டம் | - | தோட்டத்தில் 06 மாதங்கள் நடைமுறைப் பயிற்சி |
| மொழி மூலம் | - | ஆங்கிலம் |
| பாடக் கட்டணம் | - | முதல் கட்டம் ரூபா 450,000.00 (தங்குமிட வசதிகளுடன்) |
| வயதெல்லை | - | அதிகபட்ச வயது எல்லை 22 ஆண்டுகள் |

**கற்கைநெறிக்கான தகுதிகள்**.- க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் இரண்டு முறைக்கு மீறாமல் சித்தியடைந்து ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய மூன்று (03) பாடங்களிலும் திறமை சித்தியடைந்திருத்தல்.

க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் ஏதேனும் ஒரு பாட பிரிவில் இருந்து மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் விவசாயம் சார்ந்த டிப்ளோமா படிப்பை முடித்திருக்க வேண்டும்.

02. **பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா (NDPCT) NVQ நிலை 05**

| | | |
|---|---|---|
| காலம் | - | ஒரு வருடம் மற்றும் ஆறு மாதங்கள் |
| முதலாம் கட்டம் | - | 01 வருட முழு நேர படிப்பு |
| இரண்டாம் கட்டம் | - | 06 மாதங்கள் நடைமுறைப் பயிற்சி |
| மொழி | - | ஆங்கிலம் |
| பாடக் கட்டணம் | - | ரூபா 150,000.00 |

**கற்கைநெறிக்கான தகுதிகள்**.- க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் ஏதேனும் ஒரு பாட பிரிவில் இருந்து (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் விவசாயம் அல்லது தோட்டகலை சார்ந்த NVQ 04 நிலை படிப்பை முடித்திருக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

இந்தப் படிப்புகளுக்கான முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, யூலை 14 அன்று அல்லது அதற்கு முன் தபால் உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவியுடன், "இயக்குநர்/ GEO, தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம், M. D. H. ஜெயவர்தன மாவத்தை, அதுருகிரிய, இலங்கை" என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். மற்றும் விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அல்லது www.nipm.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக நிகழ் நிலையில் (Online) சமர்ப்பிக்கலாம்.

**மேலும் விவரங்களுக்கு :**

011-2770232 / 071-9708664 / 077-3652586

FM/TR/03

# NATIONAL INSTITUTE OF PLANTATION MANAGEMENT

## APPLICATION FOR ADMISSION

**Name of the Programme :**

**Name in Full : Mr. / Mrs. / Miss. / Dr. / Prof. ( Use BLOCK LETTERS)**

**Name with initials :**

**Permanent address :**

**Employer :**

**Designation :**

**Tele. No. :**

**Mobile No. :**

**Official address :**

**E-mail :**

**National Identity card No.**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

**Tele. No.** :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

**Marital status** :

Single ☐
Married ☐

**Date of birth** :

| Date | | Month | | Year | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

**Fax No.** :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

## EDUCATIONAL QUALIFICATIONS

### G.C.E (O/L) Examination

| Subject | Grade | Year |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

### G.C.E (A/L) Examination

| Subject | Grade | Year |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

## COURSE COMPLETED AT THE NIPM

| Course | Year |
|---|---|
| | |
| | |
| | |

## PROFESSIONAL QUALIFICATIONS

| Institute | Period | Qualification | Year |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

## WORK EXPERIENCE

| Organization | Period | Designation | Year |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**FINANCE**

How will you finance your professional studies at the institute?

Self ☐ Sponsored ☐

If sponsored, by whom ?

.................................... ....................................

Date Signature of the Sponsor

I hereby certify that the particulars furnished by me in this application are true & accurate and agree to abide by the rules and regulations governing the above course.

.................................... ....................................

Date Signature of the Applicant

**Payments Procedure for the programmes**

Payments can be made to the credit of NIPM Current Account No. 3697566 maintain at any branch of Bank of Ceylon ( BOC) and the printed "Customer Deposit Slip" should be forwarded to NIPM, Athurugiriya in order to obtain official receipt for payment. ( Name to be written in bank deposit slip for identification of the payee)

*06-168*

---

**கல்வி அமைச்சு**

**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (இ. உ. தொ. க. நி.)**

2024/2025 கல்வியாண்டிற்கான உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு
மாணவர்களை அனுமதித்தல்

(வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு)

2023 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முந்தைய ஆண்டுகளில் க.பொ.த.(உ./த.) பரீட்சையை வெற்றிகரமாக முடித்தவர்களிடமிருந்து இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE) நடாத்தும் உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் (இ.உ.தெ.க.நி.) கீழ்க் காணப்படும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களால் நடாத்தப்படும் மூன்று வருட அல்லது அதற்கு மேற்பட்ட கால முழுநேர உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறியைத் தொடருவதற்குப் பதிவு செய்திருந்த/ பதிவு செய்த மாணவர்கள், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அரசாங்க பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவகமொன்றில் அனுமதி பெறுவதற்குத் தகுதி பெற மாட்டார்கள். (குறிப்பு எண் 2 ஐப் பார்க்கவும்).

**விண்ணப்பிப்பது எவ்வாறு :**

விண்ணப்பம் apply.sliate.ac.lk எனும் இணையத்தளத்தினூடாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் வேறு எந்த விதமான விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE) பாடநெறிகளுக்கு நிகழ்நிலையில் விண்ணப்பிக்கும் போதும் தெரிவு செய்த பாடநெறிக்கு நிகழ்நிலையில் பதிவு செய்து கொள்ளும் போதும் விண்ணப்பதாரிகள் அனுமதிக்குரிய வழிகாட்டல்களை வாசித்து விளங்கிக்கொண்டு அதிலுள்ள விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் பின்பற்ற வேண்டும். அனுமதிக்குரிய வழிகாட்டல்கள் நிகழ்நிலை (ஒன்லைன்) விண்ணப்பப்படிவத்துடன் கிடைக்கின்றது.

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகமானது (SLIATE) பின்வரும் அட்டவணையிலுள்ள இரண்டு வகை உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறிகளையும் நடாத்துகின்றது.

| | |
|---|---|
| ***வகை 1* :**<br>இஸெட் மதிப்பெண்களின் (Z-score) அடிப்படையிலான உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகக் (SLIATE) கல்விசார் பாடநெறிகள் | கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA), வியாபார நிருவாகம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDBA), வியாபார நிதி பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDBF), பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (சிவில்) (HNDE (CIVIL), பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (இயந்திரவியல்) (HNDE (MECHANICAL) ), பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) (HNDE (ELECTRICAL & ELECTRONICS) )/, உயர் தேசிய டிப்ளோமா (தொகைக் கணக்கெடுப்பு) (HNDQS), உயர் தேசிய டிப்ளோமா (நிருமாண சேவைகள் பொறியியல்) (HNDBSE), தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்) (HNDT (Agri.) ) உணவுத் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDFT) |
| ***வகை 1* :**<br>வரையறுக்கப்பட்ட புள்ளி வழங்கல் திட்டத்தின் அடிப்படையிலான உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகக் (SLIATE) கல்விசார் பாடநெறிகள் | ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா (HND in English), தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDIT), முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDM), செயற்றிட்ட முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDPM), சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDTHM) |

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இஸெட் மதிப்பெண்களின் (Z-score) அடிப்படையில் மற்றும் வரையறுக்கப்பட்ட புள்ளிவழங்கல் திட்டத்தின் அடிப்படையில் தமது முன்னுரிமையின் கீழ் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் (ATIs) மற்றும் உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறிகளில் 25 வரையிலான வாய்ப்புக்களைத் தெரிவு செய்யலாம்.

தயவுசெய்து உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகளின் நுழைவுத் தகுதிகளுக்கு **பிரிவு 'அ'** மற்றும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் (ATIs) பற்றிய விபரங்களுக்கு **பிரிவு 'ஆ'** வையும் பார்க்கவும்.

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் ரூபா 1,000.00 கட்டணம் செலுத்துவதன் மூலம் 25 பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பக் கட்டணம் நேரடியாக வங்கிக்கு செலுத்தப்பட வேண்டும். **நிகழ்நிலையில் (ஒன்லைன்) பணம் செலுத்துவது அனுமதிக்கப்படமாட்டாது**.

வங்கிக் கட்டண பற்றுச்சீட்டு பரிவர்த்தனை இலக்கம் (TRN) ஒன்லைன் விண்ணப்பத்தில் உள்ளிடப்பட வேண்டும்.

கொடுப்பனவுகள் "மக்கள் வங்கி, ஹைட் பார்க் கிளை, கொழும்பு-02" SLIATE கணக்கு இல. 025-2-001-1-3397613 இற்கு 2024.07.19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வரவு வைக்கப்பட வேண்டும்.

ஒன்லைன் விண்ணப்பம் உறுதி செய்யப்பட்ட பிறகு உருவாக்கப்பட்ட விண்ணப்பத்தின் வன்பிரதியைப் பெற்றுக் கொள்ளவும். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் (ATI) பதிவினை மேற்கொள்ளும் போது, மேற்படி விண்ணப்பத்தின் கையொப்பமிடப்பட்ட பிரதியுடன், பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பத்தின் நிலையானது, செயற்படுத்தப்படும் போதும் செயற்படுத்தப்பட்ட பின்னரும் வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரி, கையடக்கத் தொலைபேசி இலக்கம் அல்லது தபால் மூலம் தெரிவிக்கப்படும்.

இறுதித் திகதிக்குப் பின்பு, தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முறைமை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட HND கற்கைநெறிக்கான அவர்களுடைய பதிவை இரண்டு வாரங்களுக்குள் உறுதிப்படுத்த மின்னஞ்சல் அல்லது குறுஞ்செய்தி மூலம்

அறிவிக்கப்படும். குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பதிவினை முறைமை மூலம் உறுதிப்படுத்தவில்லை எனின் SLIATE இல் அவர்கள் எந்தவொரு HND கற்கைநெறிக்கும் மீண்டும் பரிசீலிக்கப்படமாட்டார்கள் மற்றும் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**பாடநெறிகளை நடாத்தும் முறை:**

முழுநேரப் பாடநெறிகள் (வார நாட்களில்)
பகுதி நேரப் பாடநெறிகள் (வார இறுதி நாட்களில்)
போதனா மொழி : ஆங்கிலம்

சம்பந்தப்பட்ட துறைகளில் பணிபுரிபவர்களுக்கு பகுதி நேரப் பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.

**பாடநெறிக் கட்டணம் :**

முழுநேரப் பாடநெறிக் கட்டணம் - இலவசம்

**ஒரு அரையாண்டுக்கு பகுதி நேரப் பாடநெறிக் கட்டணம் பின்வருமாறு:**

| | |
|---|---|
| **கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா** – HNDA | **ரூபா 17,000.00** |
| **ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா** – (HND in English) | **ரூபா 17,000.00** |
| **தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா** – (HNDIT) | **ரூபா 30,000.00** |
| **செயற்றிட்ட முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா** – (HNDPM) | **ரூபா 20,000.00** |
| **பகுதி நேரப் பாடநெறிக்கான மீளச்செலுத்தப்படும் வைப்பு** | **ரூபா 10,000.00** |

**பதிவு:**
கல்வி மற்றும் பிற தேவையான ஆவணங்களின் அசல் மற்றும் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை பதிவு செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டும்.

**பிரிவு “அ”**

**உயர் தேசிய டிப்ளோமாக்களுக்கான நுழைவுத் தகுதிகள்**

1. **கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா** (HNDA)

1.1 **முழுநேரம் - 4 ஆண்டுகள்**
விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.
க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஒரே அமர்வில் **வணிகப் பிரிவில் கணக்கீட்டை** ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

1.2 **பகுதி நேரம் - 4 ஆண்டுகள்**
விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

(i) க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஒரே அமர்வில் **வணிகப் பிரிவில் கணக்கீட்டை** ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட துறையில் அரசாங்க நிறுவனம்/ பொது நிறுவனம்/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் பணியாளராக அல்லது சுயதொழில் செய்பவராக (தொழில் முனைவோர்) இருக்க வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது சட்டரீதியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அல்லது

(ii) க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி.

மற்றும்

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி (DTET) திணைக்களத்தினால் நடாத்தப்படும் கீழே கொடுக்கப் பட்டுள்ள சான்றிதழ் பாடநெறிகளில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

அ. கணக்கீட்டுத் துறையில் உயர் தேசிய டிப்ளோமா

ஆ. கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ்.

இ. வணிகக் கல்வியில் தேசிய சான்றிதழ்.

ஈ. கணக்கீட்டில் தேசிய சான்றிதழ்

மற்றும்

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

மற்றும்

விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட துறையில் அரசாங்க நிறுவனம்/பொது நிறுவனம்/ அங்கீகரிக்கப் பட்ட நிறுவனமொன்றின் பணியாளராக அல்லது சுயதொழில் செய்பவராக (தொழில் முனைவோர்) இருக்க வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது சட்டரீதியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**குறிப்பு 1 : வணிகப் பிரிவில் கல்விகற்ற** கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா பகுதி நேர விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளின் ஏதேனும் ஒன்றை அல்லது அதிகமானவற்றைப் பெற்றிருந்தால், அவர்களுக்கு 1 ஆம் ஆண்டிலிருந்து விலக்களிக்கப்படும். மேலும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் (ATI) கிடைப்பனவுத் திறனுடன் பிற நுழைவுத் தேவைகளைப் பூர்த்தி செய்திருந்தால் இரண்டாம் ஆண்டுக்குப் பதிவு செய்யப்படுவார்கள்.

(i) இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தினால் (SLIATE) நடாத்தப்படும் வியாபார நிர்வாகம்/ வியாபார நிதி மற்றும் வியாபாரக் கல்வியில் தேசிய டிப்ளோமா உயர் தேசிய டிப்ளோமாவினைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ii) முகாமைத்துவத் துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

(iii) இலங்கையின் பட்டயக் கணக்காளர்களால் நடாத்தப்படும் வணிக மட்டம் I மற்றும் II (அல்லது நிர்வாக நிலை அல்லது CAB I மற்றும் CAB II அல்லது அடிப்படை (Foundation) மற்றும் இடைநிலை (Intermediate) மட்டம் அல்லது உரிமம் (Licentiate) I மற்றும் II) ஐப் பூர்த்தி செய்திருத்தல்.

(iv) பட்டய முகாமைத்துவக் கணக்காளர்களின் (CIMA-UK) பகுதி I மற்றும் பகுதி II இனைப் பூர்த்தி செய்திருத்தல்.

(v) பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கத்தின் (ACCA-UK) பகுதி I மற்றும் பகுதி II இனைப் பூர்த்தி செய்திருத்தல்.

(vi) கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் (AAT) பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

(vii) சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் (CMA – Sri Lanka) நடாத்தும் ACMA பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு 2** : பொது நிருவாக சுற்றறிக்கை இல. 46/90 இன் படி, ஆட்சேர்ப்பு நோக்கங்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் கணக்கீடு பற்றிய உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, பொது வணிகமானி (சாதாரண தேர்ச்சி) பட்டத்திற்கு மாற்றுத் தகுதியாக கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2. வியாபார நிர்வாகம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDBA) முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்.

3. வியாபார நிதி பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDBF) முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க.பொ.த. (உ./த.) பரீட்சையில் வணிகப் பிரிவில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி.

4. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE - சிவில்) : முழுநேரம் - 3 ½ ஆண்டுகள்.

5. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE - மின்னியல் மற்றும் இலத்திரனியல்) : முழுநேரம் - 3 ½ ஆண்டுகள்.

6. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE - இயந்திரவியல்) : முழுநேரம் - 3 ½ ஆண்டுகள்.

7. தொகைக் கணக்கெடுப்பு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDQS) – முழு நேரம் - 2 ½ வருடங்கள்.

8. நிருமாண சேவைகள் பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDBSE): முழு நேரம் - 3 ½ ஆண்டுகள்.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் :

(i) க.பொ.த. (உ./த.) பரீட்சையில் பரீட்சை பௌதீக விஞ்ஞான பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவில் மற்றும் இணைந்த கணிதம்) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல்

9. ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா (HND in English)

9.1 - முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(அ) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் எந்தவொரு துறையிலும் ஒரே அமர்வில் (பொது ஆங்கிலம் பிரதான மூன்று பாடங்களில் ஒன்றாகக் கருதப்படாது)

மற்றும்

(ஆ) க.பொ.த.(சா./த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் கணிதத்தில் சாதாரண சித்தியும் அடைந்திருத்தல்

அல்லது

க.பொ.த. (சா./த.) ஆங்கில இலக்கியப் பாடத்திலும் மற்றும் கணிதத்திலும் சாதாரண சித்தியடைந்திருத்தல்

9.2 - பகுதி நேரம் - 2 ½ ஆண்டுகள்

9.1 இல் உள்ள மேற்கூறிய தகைமைகளுடன், விண்ணப்பதாரர் அரச துறை/பொது நிறுவனம்/அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது சுயதொழில் (தொழில் முனைவோர்) பணியில் ஈடுபடுபவராக இருக்க வேண்டும். நேர்காணலின் போது சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

10. உணவுத் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDFT) முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது பௌதிக விஞ்ஞானப் பாடப் பிரிவில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

க.பொ.த. (சா./த.) ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல்

11. தகவல் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HNDIT)

11.1 முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க.பொ.த. (உ./ த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி.

மற்றும்

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி.

11.2 பகுதி நேரம் - 2 ½ ஆண்டுகள்

11.1 இல் உள்ள மேற்கூறிய தகுதிகளுக்கு கூடுதலாக, விண்ணப்பதாரர் அரச நிறுவனம்/ பொது நிறுவனம்/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது சுயதொழில் (தொழில் முனைவோர்) ஆகியவற்றில் தொடர்புடைய துறையில் பணியமர்த்தப்பட்டவராக இருக்க வேண்டும். நேர்காணலின் போது சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

12. முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDM)
முழு நேரம் - 3 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி
மற்றும்
க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி
அல்லது
(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தேசியச் சான்றிதழ் அல்லது வணிகக் கல்விக்கான தேசியச் சான்றிதழ் (பொது நிர்வாகம்/ சந்தைப்படுத்தல்)
மற்றும்
க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி.

13. செயற்றிட்ட முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDPM)
13.1 முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி
மற்றும்
க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

13.2 பகுதி நேரம் - 2 ½ ஆண்டுகள்

13.1 இல் உள்ள தகுதிகளுக்கு கூடுதலாக, விண்ணப்பதாரர் அரச நிறுவனம்/ பொது நிறுவனம்/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது சுயதொழில் (தொழில் முனைவோர்) ஆகியவற்றில் தொடர்புடைய துறையில் பணியமர்த்தப்பட்டவராக இருக்க வேண்டும். நேர்காணலின் போது சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

14. தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்) – (HNDT – Agriculture)
முழு நேரம் - 3 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் ஒரே அமர்வில் சித்தி. (இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், உயிரியல் மற்றும் பௌதிகவியல் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக)
மற்றும்
க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி
அல்லது
(ii) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் முறைமைத் தொழில்நுட்பப் பிரிவில் உயிரியல் முறைமைத் தொழில்நுட்பம், தொழில்நுட்பத்திற்கான விவசாயம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஒரே அமர்வில் சித்தி
மற்றும்
க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

15. சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDTHM)
முழு நேரம் - 3 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி.
மற்றும்
க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

**பிரிவு "ஆ"**

**உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களின் பெயர்கள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகள் [(முழு நேரம் (முநே) மற்றும் பகுதி நேரம் (பநே) ]**

| தொ. இல. | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கங்கள் | வழங்கப்படும் பாடநெறிகள் |
|---|---|---|---|---|
| 01 | ஹார்டி உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - அம்பாறை | பேராசிரியர் ஈவன் ஏ ஹார்டி மாவத்தை, அம்பாறை | 063-2222056<br>063-2223035 | HNDT (Agriculture) (FT), HNDA (FT), HNDM (FT), HNDIT (FT), HNDTHM (FT), HND in English (FT), HNDA (PT), HND in English (PT) HNDIT (PT) |
| 02 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - அநுராதபுரம் | ஏக்கர் 111, அனுலா மாவத்தை, பண்டுலகம, அநுராதபுரம் | 025-2234417 | HNDIT(FT), HNDA (FT), HND in English (FT), HNDIT(PT) HNDA (PT), HND in English (PT) |
| 03 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - பதுளை | கிறீன்லண்ட் ட்ரைவ், பதுளை | 055-2230218<br>055-2223818 | HNDIT (FT), HNDA (FT), HNDM (FT), HND in English (FT), HNDTHM (FT), HNDIT (PT), HNDA (PT), HND in English (PT) |
| 04 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - மட்டக்களப்பு | பிரதான வீதி, கோயில் குளம் கிழக்கு, ஆரையம்பதி, மட்டக்களப்பு | 065-2247519<br>065-2247470 | HNDIT (FT), HNDA (FT), HND in English,(FT) HNDA (PT), HND in English (PT), HNDIT (PT), |
| 05 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கொழும்பு | இல.42, ரொட்ரிகோ பிளேஸ், கொழும்பு-15 | 011-2521152<br>011-2521282 | HNDE (Civil) (FT), HNDE (Mechanical) (FT), HNDE (Electrical & Electronic) (FT) HNDQS (FT), HNDBSE (FT) |
| 06 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - தெஹிவளை | இல. 51, வைத்திய வீதி, தெஹிவளை | 011-2738349 | HNDIT (FT), HNDA (FT), HNDM (F/T), HNDBA (FT), HND in English (FT), HNDBF (FT), HNDTHM (FT), HNDA (PT), HND in English (PT), |
| 07 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - காலி | சிறிதம்ம மாவத்தை, லபுதூவ, அக்மீமன, காலி | 091-2246179 | HNDE (Civil)(FT), HNDE(Mechanical) (FT), HNDE(Electrical & Electronic) (FT), HNDQS(FT), HNDIT (FT), HNDT(Agriculture)(FT), HNDA (FT), HNDM(FT), HNDTHM(FT), HNDBA(FT), HND in English (FT), HNDA (PT), HNDIT (PT) |
| 08 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கம்பஹா | நய்வல, எஸ்ஸால, வெயாங்கொடை | 033-2287519<br>033-2292544 | HNDT (Agriculture) (FT), HNDIT (FT), HNDFT(FT), HNDA (FT), HNDA (PT), HNDIT (PT), HND in English (PT) |

| தொ. இல. | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கங்கள் | வழங்கப்படும் பாடநெறிகள் |
|---|---|---|---|---|
| 09 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - யாழ்ப்பாணம் | இல. 665/2, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் | 021-2222595<br>021-2229803 | HNDE (Civil)(FT),<br>HNDE ((Electrical & Electronics) (FT),<br>HNDQS (FT), HNDA (FT), HND in English (FT),<br>HNDM (FT), HNDIT (FT),<br>HNDIT (PT), HNDA (PT), HND in English (PT) |
| 10 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம்- கண்டி | இல. 16, கெப்பெட்டிபொல வீதி, கண்டி | 081-2232097<br>081-2226644 | HNDIT (FT), HNDA (FT), HNDM(FT),<br>HNDBA(FT), HND in English (FT),<br>HNDTHM (FT)<br>HNDA (PT),HND in English (PT), HNDIT (PT) |
| 11 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கேகாலை | பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை | 035-2221297<br>035-2221713 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT),<br>HNDPM (FT), HNDPM (PT)<br>HNDA (PT), HND in English (PT) |
| 12 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - குருநாகல் | இல. 22/1, வில்கொடை வீதி, குருநாகல் | 037-2229583<br>037-2224911 | HNDIT (FT), HNDA (FT), HNDM (FT),<br>HND in English (FT), HNDTHM (FT),<br>HNDIT (PT), HNDA (PT), HND in English (PT) |
| 13 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - மன்னார் | உயிலங்குளம் மன்னார் | 023-2223045<br>0767966111 | HND in English (FT), HNDIT (FT) |
| 14 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - நாவலப்பிட்டி | ஹெயின்ஃபோர்ட் தோட்டம், நாவலப்பிட்டிய | 077-6594248 | HNDTHM (FT), HNDM (FT), HND in English (FT),<br>HND in English (PT) HNDIT (FT), HNDIT (PT),<br>HNDBF (FT) |
| 15 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - இரத்தினபுரி | புதிய நகரம், இரத்தினபுரி | 045-2231492<br>045-2231493 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT),<br>HND in English (PT), HNDA (PT) |
| 16 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - சம்மாந்துறை | ATI ஒழுங்கை, சம்மாந்துறை | 067-2261304 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT),<br>HNDM (FT),<br>HNDIT (PT), HNDA (PT), HND in English (PT) |
| 17 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - தங்காலை | யாவத்த, நெதோல்பிட்டிய, தங்காலை | 047-2241845<br>047-2241846 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT)<br>HNDA (PT), HND in English (PT) , HNDIT (PT) |
| 18 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம்- திருகோணமலை | கன்னியர் வீதி, வரோதய நகர், திருகோணமலை | 026-2223232 | HNDA (FT), HND in English (FT),<br>HNDA (PT), HNDIT (FT), HNDIT (PT),<br>HND in English (PT) |
| 19 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - வவுனியா | ஓப் A 9 வீதி, வேப்பங்குளம், ஓமந்தை, வவுனியா | 024-2052733 | HNDA (FT), HND in English (FT),<br>HNDA (PT), HND in English (PT), HNDIT (FT),<br>HNDIT (PT) |

**குறிப்பு**.-

1. விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன் தேவையான நுழைவுத் தகுதிகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

2. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் (இ. உ. தெ. க. நி.) கீழ் காணப்படும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களால் நடத்தப்படும் மூன்று வருட அல்லது அதற்கு மேற்பட்ட கால முழுநேர உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறியைத் தொடருவதற்குப் பதிவு செய்திருந்த/பதிவு செய்த மாணவர்கள், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் (அவ்வப்போது திருத்தப்பட்ட) கீழ் நிறுவப்பட்ட அரச பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவகமொன்றில் அனுமதி பெறுவதற்குத் தகுதிபெற மாட்டார்கள்.

   (i) கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA)
   (ii) பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (சிவில்) (HNDE) (CIVIL)
   (iii) பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (இயந்திரவியல்) (HNDE) (MECHANICAL)
   (iv) பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) (HNDE (ELECTRICAL & ELECTRONICS)
   (v) உயர் தேசிய டிப்ளோமா (நிருமாண சேவைகள் பொறியியல்) (HNDBSE)
   (vi) தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்) (HNDT) (Agri.)
   (vii) முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDM)
   (viii) சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDTHM)

3. முழு நேர கற்கைநெறிகளுக்கு 23 வயதுக்கு குறைவான விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் 2023 இல் (G.C.E. (A/L) தேர்வை வெற்றிகரமாக முடித்த விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. ஒரு குறிப்பிட்ட ATI இல் பாடநெறியைத் தொடங்க குறைந்தபட்சம் 50 மாணவர்கள் குறிப்பிட்ட பாடநெறியில் பதிவு செய்திருக்க வேண்டும். திட்டத்தைத் தொடங்க போதுமான எண்ணிக்கையில் மாணவர்கள் இல்லை என்றால், அத்தகைய மாணவர்கள் அதே திட்டம் நடத்தப்படும் அருகிலுள்ள ATI க்கு மாற்றப்படுவார்கள். இறுதி முடிவு பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.
5. அனைத்து பாடப்பிரிவுகளின் முழுநேர மாணவர்கள் வார நாட்களிலும் தேவைப்பட்டால் வார இறுதி நாட்களிலும் விரிவுரைகளில் கலந்து கொள்ள வேண்டும்.
6. பகுதி நேர பாடநெறிகள் வார இறுதி நாட்களில் நடத்தப்படும்.
7. முழுநேர மற்றும் பகுதி நேர பாடநெறிகளுக்கான பயிற்றுவிக்கும் முறை பௌதீகரீதியானதாக (வகுப்பில்) இருக்கும். எனினும், தேவையைப் பொறுத்து இருவழிக் கற்பித்தலும் பிரயோகிக்கப்படும்.
8. கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA) (முழு நேர) திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் வருடங்கள் வார நாட்களில் மட்டுமே நடத்தப்படுகிறது. மூன்றாவது மற்றும் நான்காவது வருடங்கள் வார இறுதி நாட்களில் நடத்தப்படுகின்றன.
9. முழு நேர திட்டங்களின் மாணவர்கள் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் உள்ளகப் பயிற்சி பெற வேண்டும். பகுதி நேர மாணவர்கள் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு திட்டம்/ தொழில்துறை பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.
10. பகுதி நேர விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட துறையில் பணிக்கமர்த்தப்பட்டிருக்க வேண்டும்.
11. **ஒரு மாணவர் முழுநேர பாடநெறியில் சேர்ந்தவுடன், வேறு எந்த ATI க்கும் மாற்றுவது எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படாது**.
12. எந்தவொரு HND பாடத்திற்கும் பதிவு செய்த மாணவர்கள், சம்பந்தப்பட்ட நிறுவனம் வழங்கிய பதிவு முடிவடையும் தேதியிலிருந்து 60 நாட்களுக்கு முன் எந்தவித கட்டணமும் இன்றி தங்கள் பதிவை இரத்து செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.
13. (i) 60 நாட்களுக்குப் பிறகு தங்கள் பதிவை இரத்துச் செய்யும் மாணவர்களிடமிருந்து பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து மாதம் ரூபா 5,000.00 வசூலிக்கப்படும். ஆறு மாத காலம் அல்லது அதற்கு அதிகமான காலத்தில் தமது பதிவை இரத்துச் செய்யும் மாணவர்களிடமிருந்த அதிபட்சம் ரூபா 30,000.00 அறவிடப்படும்.

    (ii) திரும்பப் பெறக்கூடிய ஆரம்ப வைப்புத்தொகையாக ரூபா 10,000.00 பகுதி நேர மாணவர்களின் பதிவின் போது அறவிடப்படுவதுடன் அது பாடநெறியின் முடிவில் திருப்பி செலுத்தப்படும். மாணவர் பாடநெறியிலிருந்து முன்னதாக வெளியேறினால், இந்த வைப்புத்தொகை மீளச் செலுத்தப்படமாட்டாது. பகுதி நேர விண்ணப்பதாரர்களில் பதிவின் போது, மொத்தப் பாடநெறிக் கட்டணத்தையும் முழுமையாகச் செலுத்தும் விண்ணப்பதாரர்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.

14. முழுநேர மற்றும் பகுதி நேர மாணவர்களுக்கு அரையாண்டு இறுதித் தேர்வுகள் வார நாட்கள் மற்றும் வார இறுதி நாட்களில் நடைபெறும்.
15. க.பொ.த. (உ./ த.) மற்றும் க.பொ.த. (சா./ த.) பரீட்சைகள் இலங்கையின் பரீட்சைகள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட வேண்டும்.
16. தவறான தகவலை வழங்கிய விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்படுவார்கள்.
17. இலங்கை உயர் தொழல்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் (SLIATE) பணிப்பாளர் நாயகத்தின் முடிவே உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு 2023/2024 கல்வியாண்டுக்கான மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான இறுதி முடிவாக இருக்கும்.
18. உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களின் இருக்கை திறன் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.
19. மேலதிக விபரங்களுக்கு www.sliate.ac.lk என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 2024.07.19

பணிப்பாளர் நாயகம்
இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்
(SLIATE)

06-182

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.